**அ. ஞானசேகரன், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்,
திருவண்ணாமலை 606 604.

தொலைபேசி எண்கள்
அலுவலகம் : 04175-233333
இல்லம் : 04175-233366
நிகரி : 04175-232222



# அன்புள்ள குழந்தையே உன் பாதுகாப்பு உன் கையில் !

அன்புத் தம்பி / தங்கையே!

உன்னுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு எனது அன்பான விசாரிப்புக்களை தெரிவிக்கவும், இம்மாவட்டத்திலுள்ள அனைத்து குழந்தைச் செல்வங்களுடன் நேரில் பேசிட ஆவல் அதற்கான அவகாசம் இல்லாத காரணத்தால் இக்கடிதம் மூலம் உனது கல்வி, எதிர்காலம் மற்றும் பாதுகாப்புப் பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் முக்கியமாக வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சிக்கான உரிமை மற்றும் பங்கேற்கும் உரிமைகள் உள்ளன.

பாலியல் துன்புறுத்துதல் கொடுமையிலிருந்து உன்னை பாதுகாத்துக்கொள்ள உன் நம்பிக்கைக்குரியவர்கள் மற்றும் உன்னை நல்ல முறையில் பார்த்துக்கொள்பவர்கள் தவிர வேறு யாராவது உன்னை தொட்டாலோ தொட முயற்சி செய்தலோ **தொட விடாதே! எதிர்த்து நில்! சத்தமாக கூச்சலிடு! நிறுத்து எனக்கு பிடிக்கவில்லை! உன்னைப்பற்றி சொல்லிவிடுகிறேன் என்று தைரியமாக சொல்!! உடனடியாக அந்த இடத்தை விட்டு ஓடு!!** அப்படி யாராவது உன்னிடம் தவறாக நடந்தால் பெற்றோரிடமோ, ஆசிரியரிடமோ உடனடியாக சொல்லி உதவி கேள்! அல்லது 1098 என்ற சைல்டு லைன் இலவச அவசர தொலைபேசி எண் மூலம் அத்தகவலை கூறு. தகவல் தெரிவிப்பவர் விவரம் ரகசியமாக பாதுகாக்கப்படும். பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தேவையான ஆலோசனை சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவும் உதவி தேவைப்பட்டால் விடுதி வசதியும் ஏற்படுத்தி தரப்படும்.

குழந்தைகளுக்கு எதிராக பாலியல் குற்றங்களை தடுப்பதற்காக பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO Act 2012) கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் மூலம் குற்றம் புரிந்தவருக்கு கடுமையான தண்டனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வகையான துன்புறுத்துதல் நம் மாவட்டத்தில் எங்கேனும் நடந்தால் ஓடோடி வந்து உங்களுக்கு உதவி செய்ய நானும் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த அதிகாரிகளும் தயாராக இருக்கிறோம். இந்த தகவலை நண்பர்களுக்கும் தவறாமல் சொல்வாய் என நம்புகிறேன். இது போன்ற குழந்தைகள் சார்ந்த பிரச்சனைகள் யாருக்கேனும் வந்தாலும் நாம் எப்பொழுதும் பொறுத்துக்கொள்ள முடியாது. நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டு நம் மாவட்டத்தை குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலமிக்க மாவட்டமாக உருவாக்கிடுவோம்.

மேலும், குழந்தைகள் உதவிக்கு குழந்தைகள் நலன் சார்ந்த அதிகாரிகளின் சில கைபேசி எண்களையும் இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன். அதை தவறாமல் பயன்படுத்துமாறு அன்பு குழந்தைகளாகிய உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட சமூக நல அலுவலகம் **04175 - 233810**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் **04175 - 233030, 9442671925**

குழந்தைகள் நலக் குழுமம் **04175 - 237098, 94867 24694**

மேலும் தொடர்பு கொள்ள

இலவச தொலைபேசி எண். சைல்டு லைன் **1098** மற்றும் **04175-235077**


**அன்பு வாழ்த்துக்கள்**

இப்படிக்கு

2/4

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை


யாரும் தொடக்கூடாத உனது தனிப்பட்ட 4 உறுப்புகள்
முகம், மார்பு, கால்களுக்கிடையில் மற்றும் பின்பக்கம்.



யாராவது தொட்டால் வேண்டாம் என்று
கத்த வேண்டும்




உடனடியாக அந்த
இடத்தை விட்டுச் செல்லவேண்டும்




அல்லது 1098 போன் செய்ய வேண்டும்



நம்பிக்கையானவர்களிடம் மறைக்காமல்
சொல்லி உதவி பெற வேண்டும்




அனைவரிடமும் அவரைக் குறித்துச்
சொல்ல வேண்டும்



*Sponsors by*

CHILD LINE 1098 NIGHT & DAY

Terre des hommes CORE
டெரிடெஸ் ஹோம்ஸ் கோர் நிறுவனம்
பெரும்பாக்கம் ரோடு, திருவண்ணாமலை
தொலைபேசி : 04175-238008

திருவண்ணாமலை மாவட்டம் சமூக பாதுகாப்புத்துறை







திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைத்து குழந்தைகளுக்கும் எழுதும் பாதுகாப்பு குறித்த விளக்க கடிதம் திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக 09.09.2015, புதன் கிழமை, அன்று குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் குழந்தைகளுக்கு எதிராக பாலியல் குற்றங்களை தடுப்பதற்கான சட்டம் 2012 (POCSO Act 2012) குறித்த விழிப்புணர்வு பேரணி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில், வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், குழந்தை நலக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட சமூக நல அலுவலர், சைல்டு லைன், மற்றும் பல்வேறு அலுவலர் பங்கேற்புடன் திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி வரை நடைபெற்றது.